**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 91** **நாள்: 28.07.2017**

## பெருநகர சென்னை மாநகராட்சியில் ஒருங்கிணைந்த குப்பை கையாளும் முறையினை அமலாக்குவதற்கான திட்டக்கூறு குறித்து பொதுமக்களுடனான கருத்துக் கேட்புக் கூட்டம் நடைபெற்றது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் குப்பை கொட்டும் வளாகத்திலுள்ள குப்பைகளை பதனிடுதல், அறிவியல் ரீதியான சுகாதார குப்பை கொட்டுமிடம் அமைத்தல், அறிவியல் ரீதியான மறுசீரமைத்தல் ஆகிய பணிகளாகிய ஒருங்கிணைந்த குப்பை கையாளும் முறைமையை அமலாக்குவதற்கான திட்டக்கூறு தொடர்பான பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் இன்று (28.07.2017) நடைபெற்றது.

கொடுங்கையூரில் குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பை கொட்டும் 1 முதல் 8 வரையிலான மண்டலங்களுக்கு தண்டையார்பேட்டையிலும், பெருங்குடியில் குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பை கொட்டும் 9 முதல் 15 வரையிலான மண்டலங்களுக்கு புழுதிவாக்கத்திலும் இந்த கருத்துக் கேட்பு கூட்டம் நடைபெற்றது.

இத்திட்டம் எவ்வாறு செயல்படுத்தப்படும் என்பது குறித்து பொதுமக்களுக்கு குறும்படத்தின் மூலம் விளக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பொதுமக்கள் தங்களது கருத்துகளை தெரிவித்தனர். அதனைத் தொடர்ந்து, உயர்மட்ட அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தின் போது இக்கூட்டத்தின் மூலம் பெறப்பட்ட கருத்துகளை வைத்து ஆலோசனை மேற்கொள்ளப்படும் என ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், துணை ஆணையாளர் (சுகாதாரம்) திருமதி.எம்.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள், வடக்கு வட்டார துணை ஆணையர் (பொ) டாக்டர்.சுபோத் குமார், இ.ஆ.ப., அவர்கள், தெற்கு வட்டார துணை ஆணையர் திரு.எஸ்.கோபால சுந்தர ராஜ், இ.ஆ.ப., அவர்கள், மேற்பார்வை பொறியாளர்கள், மண்டல அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**